செய்தி வெளியீடு எண்:404 நாள்:08.07.2021

செய்தி வெளியீடு

**நெடுஞ்சாலைத்துறை வெளிப்படைத் தன்மையுடன் திறமையாக இயங்க பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் மடிக்கணினிகள் வழங்கினார்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (8.7.2021) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத்துறை வெளிப்படைத் தன்மையுடன் திறமையாக இயங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 28.31 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 1213 மடிக்கணினிகள் மற்றும் 1484 கணினிகளை அலுவலகப் பயன்பாட்டிற்காக வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து, 7 பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர் திரு.தீரஜ்குமார் இ.ஆ.ப., தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II திட்ட இயக்குநர் திரு.B.கணேசன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் திரு.பி.ஆர்.குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9